## பணிபுரியும் மகளிருக்கு 'தோழி' விடுதி! குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம்! புதுமைப் பெண்! தமிழ்ப்புதல்வன் திட்டம்!

# முதல்வரின் சமூக நலத் திட்டங்களால் பெண்கள் - குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடுகள் நீக்கம்!

## சட்டப்பேரவையில் – சமூக நலத்துறை – மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானிய பதிலுரையில் – அமைச்சர் திருமதி கீதா ஜீவன் பெருமிதம்!

**சென்னை, ஏப். 19 - சட்டப்பேரவையில் சமூக நலத் துறை - மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கை பதிலு ரையாற்றுகையில் அமைச்சர் கீதாஜீ வன் முதல்வரின் சமூக நலத் திட்டங் களால் பெண்கள் - குழந்தைகளின் ஊட்டச் சத்து குறைபாடுகள் நீக்கப் பட்டுள்ளன என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சமூக நலத்துறை மானியக் கோரிக்கை யில் அமைச்சர் கீதாஜீவன் பதிலுரை வரு மாறு:-

பேரவைத் தலைவர் அவர்களே, பெண் ணுரிமை, பெண் கல்வி, பெண்களுக்கு சொத்துரிமை, வேலைவாய்ப்பு, பெண்க ளுக்கு சமவாய்ப்பு போன்ற தந்தை பெரி யார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் கண்ட பல ஆண்டு கனவுகளை நனவாக்கி தந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்க ளுக்கு எனது முதல் வணக்கம்.

முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக பல வேறு திட்டங்களைத் தந்து இந்தியாவின் சிறந்த முதலமைச்சர் எனப் பாராட்டுகளைக் குவித்தவர். அப்போதுகூட அந்தப் பாராட்டு களை ஏற்காமல் சிறந்த முதலமைச்சர் என் பதைவிட தமிழ்நாடு, இந்தியாவில் சிறந்த மாநிலம் என்று புகழப்படுவதையே விரும் புகிறேன். அதுவே என் குறிக்கோள் என்று கூறிய தமிழ்த்தாயின் தவப்புதல்வன். (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிப் படிப்பை முடித்து உயர் கல்வியில் சேரும் மாணவிய ருக்கும் மாதம் ரூபாய் 1,000/ அள்ளி வழங் கும் "புதுமைப்பெண் திட்டம்"; மாணவர்க ளுக்கும் மாதம் ரூபாய் 1,000/ வழங்கும் "தமிழ்ப் புதல்வன்" திட்டம் தந்து உயர் கல் வியில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம்; ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அறிக்கையில் வறுமை ஒழிப்பில் இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம்; இந்திய ரிசர்வ் வங்கி ஆய்வறிக் கையில் மனித வளங்களை வளர்ப்பதில் தமிழ்நாடு முதலிடம்; ஜவுளிப் பொருட்கள், தோல் பொருட்கள் ஏற்றுமதிகளில் இந்தியா வில் தமிழ்நாடு முதலிடம்.

2024-2025 ஆம் ஆண்டில் 9.69 சத விகிதம் வளர்ச்சி வீதத்துடன் பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடம் என எங் கும், எதிலும் தமிழ்நாடு முதலிடம் என உயர்த்தி,

'எண்ணிய எண்ணியாங்கெய்துப எண் ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.'

என அய்யன் திருவள்ளுவர் வகுத்த இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழும் எங் கள் முதலமைச்சர் அவர்களே! ஒரு சட்டமன் றம் இயற்றிய மசோதாக்களை, ஆளுநர் அல்ல; குடியரசுத் தலைவர் அல்ல; உச்ச நீதிமன்றமே ஒப்புதல் வழங்கிச் சட்டங்களாக் கிய புதிய வரலாற்றை இந்தியாவில் முதன் முதலில் உருவாக்கிய ஜனநாயகச் சிற்பி தமிழ்நாடு முதலமைச்சர்; திராவிட நாயகர்; தளபதியார் அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இளைய சமுதாயத்தின் இணையில்லா தோழர்; திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில இளைஞரணிச் செயலாளர்; தமிழ் நாட்டின் துணை முதலமைச்சர் அவர்களுக் கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், எங்களது தூத்துக்குடி பாராளுமன்ற தொகு தியின் உறுப்பினர், தி.மு.க. பாராளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி அக்கா அவர்க ளுக்கும், மதிப்பிற்குரிய அவை முன்னவர், கழகத்தின் பொதுச் செயலாளர் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழ் நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர் களுக்கும் மற்றும் அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் களுக்கும் எனது வணக்கத்தை உரித்தாக் குகிறேன்.

தலைவர் கலைஞர் அவர்களின் முரட்டுப் பக்தன் எனப் பெயர் பெற்ற முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர், மறைந்த எனது தந்தை யார் என். பெரியசாமி அவர்களை இத்தரு ணத்தில் நான் நினைவு கூருகிறேன்.

இப்பெருமைமிகு பேரவையில் சட்ட மன்ற உறுப்பினராக அமருவதற்கு வாய்ப் பளித்த எனது தூத்துக்குடி தொகுதியின் வாக் காளப் பெருமக்களுக்கும், என்னோடு கழகப் பணியாற்றிவரும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயல் வீரர்க ளுக் கும், கூட்டணிக் கட்சித் தோழர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கி றேன்.

### சமூக நலத்துறை!

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மானியக் கோரிக்கை மீதான பதிலுரையை இந்த அவைக்கு நான் சமர்ப் பிக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, பெண் களை சுயசார்பு உடையவர்களாகவும், பொருளாதார சுதந்திரம் பெற்றவர்களாக வும், நிலைத்த தன்மை உடையவர்களாக வும் உருவாக்கிட நம் முதலமைச்சர் தளபதி யார் அவர்கள் மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், பெண் உயர் கல்விக்கு புதுமைப் பெண் திட்டம், தோழி தங்கும் விடு திகள், சுய உதவிக் குழுக்களுக்கு குழுக் கடன், பெண்கள் பெயரில் வீடுகள் மற்றும் வீட்டுமனை பட்டாக்கள் என பெண்களின் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களை நிறை வேற்றி வருகின்றார்.

### காலை உணவுத் திட்டம்!

பள்ளி மாணவர்கள் பசியின்றி ஆற்றிட நம் முதலமைச்சர் தளபதியார் கொண்டு வந்த மகத்தான திட்டம்தான் "முதலமைச்ச ரின் காலை உணவுத் திட்டம்". இத்திட்டம் முதற்கட்டமாக 2022 ஆம் ஆண்டு செப்டம் பர் மாதத்தில் 1,545 பள்ளிகளில் முதலமை ச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தற்போது, இத்திட்டத்தில் கிராமப்புற அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற் றும் நகர்ப்புற அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் பயனடைந்து வரு கின்றனர்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட் டத்தினைப் பற்றி மாநில திட்டக் குழு ஆய்வு செய்து அறிக்கை அளித்துள்ளது. அதில் காலை உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்ட பின்பு பள்ளிகளில் மாணவர்களின் வருகை அதிகரித்துள்ளது. குழந்தைகளின் ஊட்டச்சத்தும் அதிகரித்து. குழந்தைகளின் ஆரோக்கியமும் மேம்பாடு அடைந்துள்ளதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காலை உண வுத் திட்டத்தால் குழந்தைகளின் ஆரோக்கி யம் மட்டுமல்லாமல், வகுப்பறையில் ஈடுபாடும் அதிகரித்துள்ளது. அதன் பலனாக கல்வித் திறன் அதிகரித்துள்ளது எனவும் அவ் வறிக்கை குறிப்பிடுகிறது. வரும் ஆண்டில் இத்திட்டத்தில் அரிசி உப்புமாவிற்கு பதிலாக சாம்பாருடன் பொங்கல் வழங்கப்படவுள்ளது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

தற்போது, இத்திட்டத்தில் 34,987 பள்ளி களைச் சார்ந்த 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 17 இலட்சத்து 53 ஆயி ரம் மாணவர்கள் பயனடைந்து வருகின்ற னர். நாட்டிலேயே முதன்முறையாக அறிமு கப்படுத்தப்பட்ட இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க திட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களும், பிற நாடுகளும் இத்திட்டத்தினை பின்பற்றி, செயல்படுத்தி வருகின்றார்கள். வரும் கல்வி யாண்டு முதல் நகரப் பகுதிகளிலுள்ள அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளி மாணவர்க ளுக்கும் காலை உணவு வழங்கப்படும் என முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

### மாதந்தோறும் மாணவிகளுக்கு ரூ.1000 உதவித் தொகை!

பெண்களுக்கு உயர் கல்வி அளிப்பதன் மூலம் பாலின சமத்துவத்தை உருவாக்குவ தற்காக மூவலூர் இராமாமிர்தம் அம்மை யார் புதுமைப் பெண் திட்டத்தை முதல மைச்சர் தளபதியார் உருவாக்கித் தந்துள் ளார். இத்திட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளிய குடும்பங்களைச் சார்ந்த அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் படித்த மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000/ அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

பொருளாதார சூழ்நிலையால், 12 ஆம் வகுப்புடன் படிப்பை நிறுத்திய மாணவிகள் இத்திட்டம் அறிமுகப்படுத்தியவுடன் மீண் டும் கல்லூரில் சேர்ந்து படித்து வருகின்ற னர். இத்திட்டத்தின் நோக்கம் பெண்களின் திறமையை வளர்த்து, வேலைவாய்ப்பு, தொழில் வாய்ப்புகளை உருவாக்கி, பொரு ளாதார சுதந்திரத்தை பெண்களுக்கு வழங் குவதாகும். ஒரு குடும்பத்தில் கல்வி பயிலும் அத்தனை பெண்களும் இத்திட்டத்தில் பயன டையலாம். மாணவிகள் அரசின் வேறு திட்டத்தில் பயனடைந்து வந்தாலும், புது மைப் பெண் திட்டத்திலும் பயனடையலாம். இத்திட்டத்தில் பயனடைய வருமான உச்ச வரம்பு கிடையாது. RTE சட்டத்தின்கீழ், தனி யார் பள்ளியில் பயின்ற மாணவிகளும் புது மைப் பெண் திட்டத்தில் பயனடையலாம். இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல் இது வரை 4 இலட்சத்து 95 ஆயிரம் மாணவிகள் பயனடைந்துள்ளனர். இதுவரை 721 கோடி ரூபாய் மாணவிகளின் உயர் கல்விக்காக செலவிடப்பட்டுள்ளது.

இதேபோல், தமிழ்நாட்டில் மாணவர்கள் உயர் கல்வி படிப்பதற்காக, முதலமைச்சர் அவர்கள் 9-8-2024 முதல் "தமிழ்ப் புதல் வன்" திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார் கள். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள் ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல்

12 ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் படித்த மாணவர்களுக்கு 1,000 ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக் கப்படுகிறது. இத்திட்டத்தில் இதுவரை 3 இலட்சத்து 80 ஆயிரத்து 467 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழி யர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டு மென்று உறுப்பினர்கள் பேசும்போது இங்கே கூறினார்கள். முதலமைச்சர் அவர் கள்முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களு டைய ஆட்சியிலேதான் அவர்கள் பகுதிநேர நிரந்தரப் பணியாளர்கள் என வகைப்படுத் தப்பட்டனர். தற்போது அவர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்கப்படுகிறது. பண் டிகை முன்பணம், பொங்கல் பண்டிகை முன்பணம், மலைப்படி, தற்செயல் விடுப்பு, மகப்பேறு விடுப்பு, குடும்ப நல நிதி, ஓய்வூதி யம் உள்ளிட்ட அத்தனை உரிமைகளையும் வழங்கியவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் என்பதை நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.



வேலைவாய்ப்பு பெற்று, பணி நிமித்த மாக வெளியூர்களில் தங்கும் பெண்களின் பாதுகாப்பிற்காக முதலமைச்சரின் உத்தர வுப்படி, 'தோழி' பணிபுரியும் விடுதிகள் கட்டப் பட்டு வருகின்றன. 'தோழி' பணிபுரியும் மக ளிர் விடுதிகளில் பெண்களின் பாதுகாப்பு மற்றும் வசதிக்காக மேம்படுத்தப்பட்ட நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. முதற்கட் டமாக, திருச்சி, தாம்பரம், கூடுவாஞ்சேரி ஆகிய 3 பகுதிகளில் முதலமைச்சர் அவர்க ளால் திறந்து வைக்கப்பட்டு, சிறப்பாக செயல் பட்டு வருகிறது.

இரண்டாம் கட்டமாக, திருவண்ணா மலை, ஒசூர் மற்றும் புனித தோமையர் மலை ஆகிய இடங்களில் தோழி புதிய மக ளிர் விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டு விரைவில் முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட உள்ளன.

### மேலும் 10 இடங்களில் தோழி விடுதிகள்!

மேலும், இத்துறையில் ஏற்கனவே செயல்பட்டு வந்த 7 பணிபுரியும் மகளிர் விடு திகள் சீரமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மேலும், 6 பணிபுரியும் மகளிர் விடுதிகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. பெண்களிடையே அதிக வரவேற்பினை பெற்றுள்ள தோழி பணிபுரியும் மகளிர் விடு திகள் வரும் ஆண்டுகளில் 10 இடங்களில் அமைக்கப்படும் என முதலமைச்சர் அவர் கள் அறிவித்துள்ளார்கள். பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பினை உறுதிசெய் யும் நோக்கத்துடன் நாட்டிற்கே வழிகாட்டும் வகையில் மாவட்டந்தோறும் தோழி விடுதி கள் அமைக்க வேண்டுமென்ற இலக்கை நோக்கில் தமிழ்நாடு வெற்றிகரமாக பய ணித்து வருகிறது.

முதியோர் நலனுக்கு இந்த முறை நமக்கு பட்ஜெட்டில் 'அன்புச்சோலை மைய ங்கள்' 25 அமைக்கப்படும் என்று கூறியுள் ளார்கள். அதுபோல இத்துறையில் கடந்த 4 ஆண்டில் 606 பேர் நேரடி நியமனத்திலும், 1,115 பேர் கருணை அடிப்படையிலும், பதவி உயர்வின்மூலம் 3,000 பேரும், அதே போல இப்போதும் புதிய அறிவிப்பும் வழங் கப்பட்டுள்ளது.

அதேபோல நம்முடைய 2024-2025ல் 33.71 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு நான்கு இணை சீருடைகள் தைப்பதற்கு ஒவ்வொரு setற்கும் ரூபாய் 10 முதல் 20 ரூபாய் என்று தையல் கூலி உயர்த்தி வழங் கியுள்ளது. அதனால்தான் நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பில் 101.89 கோடி ரூபாய் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

### ஊட்டச் சத்து உறுதி செய்யும் திட்டம்!

தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு இருக்கக்கூடாது என் பதற்காக ஊட்டச்சத்து உறுதி செய்யும் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் நம்முடைய அத்தனை அங்கன்வாடி குழந்தைகளுக்கும் மருத்துவ பரிசோதனை செய்து கடந்த ஆண்டு 92,015 குழந்தை களுக்கு சிறப்பு ஊட்டச்சத்து இனிப்பு வழங் கப்பட்டது. அந்த பாலூட்டும் தாய்மார்களுக் கும் வழங்கப்பட்டது. அதன்மூலம் பார்த்தீர் களென்றால் கிட்டத்த 77.3% குழந்தைகள் இயல்பு நிலைக்கு திரும்பினர். இந்த ஆண் டும் அதேபோல மக்கள் நல்வாழ்வுத் துறை யில் இருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்ப டையில் எடை குறைவாக பிறந்த 6 மாதத்திற்குட்பட்ட குழந்தைகள் அடையா ளம் காணப்பட்டு, அந்த குழந்தையின் தாய்க்கு, ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப் பட்டு, தொடர்ந்து கண்காணிப்பு அறிவுரை வழங்கப்பட்டு, இந்த ஆண்டும் அதேபோல இந்த மார்ச் மாதம் வரை 74.09% குழந்தை கள் இயல்பு நிலைக்கு மேம்பட்டுள்ளனர் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் பயன்பாட்டில் உள்ள PICME என்கிற செயலி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறை யின் செயலியான TNICDS உடன் இணைக் கப்பட்டு இப்போது தொடர்ச்சியாக பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணி பெண்கள், எடை குறைவாக உள்ள குழந்தைகளை இந்த அரசு கண்காணித்து வருகிறது.

மேலும், பல்வேறு மேம்பாட்டு திட்டங்கள்மூ லம் குழந்தைகள் மையங்கள் எல்லாம் Smart Centres மேம்படுத்தப்பட்டு வருகிறது என்பதை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறன். அதேபோல திருநங்கை களுக்கு முதலமைச்சர் அவர்கள் ஊர்க்கா வல் படையில் சேர்க்கப்படுவார்கள் என்றும் புதுமைப்பெண் திட்டத்தில் பயனடையலாம் என்றும் புதிய அறிவிப்பு தந்து, திருநங்கைகள் சுயமரியாதையுடன் சமூக நீரோட்டத்தில் வாழ்வுபெற ஒளியேற்றி வைத்துள்ளார் முதலமைச்சர் தளபதியார் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

### சமூக நலத் துறை அறிவிப்புகள்

**1. தமிழ்நாட்டில் பள்ளிகளில் செயல்ப டும் 43,131 சத்துணவு மையங்களில் பயன்பெறும் 42.71 இலட்சம் மாண வர்களுக்காக வழங்கப்பட்டு வரும் உணவூட்டு மானியத் தொகை ஆண்டொன்றுக்கு 61.61 கோடி ரூபாய் கூடுதலாக உயர்த்தி வழங்கப் படும்.**

**2. தமிழ்நாட்டில் செயல்படும் சத்துணவு மையங்களில் 25 பயனாளிகளுக்கு அதிகமாக பயன்பெறும் 25,440 சத் துணவு மையங்களுக்கு 9.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எரிவாயு அடுப் புகள் புதியதாக வழங்கப்படும்.**

## மகளிர் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 2000 மகளிர்க்கு உலர் - ஈர மாவு அரைக்கும் இயந்திரம்!

**3. திருநங்கைகளுக்கான ''அரண்'' எனும் பெயரில் இரண்டு தங்கும் இல் லங்கள், சென்னை மற்றும் மதுரை யில் 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட் டில் அமைக்கப்படும்.**

**4. வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ள மக ளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத் தும் பொருட்டு, 2000 மகளிருக்கு உலர் மற்றும் ஈரமாவு அரைக்கும் வணிக ரீதியிலான இயந்திரங்கள் வாங்க மொத்தம் 1 கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும்.**

**5. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுத்திடும் வகையில் 20 கருத்தரங்கங்கள் மொத்தம் 1 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்.**

**6. புகழ்பெற்ற, தரம் வாய்ந்த பயிற்சி நிறுவனங்கள்மூலம் மாவட்ட சமூக நல அலுவலர்கள் மற்றும் பணியா ளர்களுக்கு 1 கோடி ரூபாய் செலவில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங் கப்படும்.**

**7. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுத்திடும் வகையில் விழிப்புணர்வு புத்தகங்கள் மற்றும் குறும்படங்கள் 1 கோடி ரூபாய் செலவில் தயாரித்து வெளியி டப்படும்.**

**8. வளர்ச்சி குறைபாடுள்ள** (Develop–mental Delays) **குழந்தைகளைக் கண் காணிக்கவும், முன்பருவக் கல்வி மற்றும் கற்றல் திறனை வளர்க்கவும் செயலிகளை உருவாக்கி, அதனைப் பயன்படுத்தும் பயிற்சிகள் அனைத்து அலுவலர் மற்றும் பணியாளர்க ளுக்கு இரண்டு கோடி ரூபாய் செல வினத்தில் வழங்கப்படும்.**

**9. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் குறித்தான குறைதீர்ப்பு மற் றும் சேவைகளை பொதுமக்கள் பெறு வதற்கு ஏதுவாக 1.50 கோடி ரூபாய் செலவில் கட்டணமில்லா தொலை பேசி மற்றும்** IVRS **தொழில்நுட்ப வசதி ஏற்படுத்தப்படும்.**

**10. பச்சிளம் குழந்தைகளின் உடல் நலனை காக்கவும், குறிப்பாக தவ றான பாலூட்டும் முறைகளால் ஏற்ப டும் பச்சிளம் குழந்தைகளின் மர ணங்களைத் தவிர்க்கவும், கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய் மார்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.**

**11. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகளின்கீழ் வரும் அனைத்து அலுவலகங்களையும் முழுமையான மின்னணு** (Digital) **அமைப்பாக மாற் றும் விதமாக 9.18 கோடி ரூபாய் மதிப்பில் கணினி மற்றும் அதன் தொடர்புடைய உபகரணங்கள் வழங் கப்படும்.**

**12. கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம் வட் டாரத்திலும், தருமபுரி மாவட்டத்தில் ஏரியூர் மற்றும் கடத்தூர் வட்டாரங்க ளிலும் என மொத்தம் மூன்று புதிய குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவல கங்கள் 1.53 கோடி ரூபாய் மதிப்பீட் டில் தோற்றுவிக்கப்படும்.**

**13. மயிலாடுதுறை மாவட்டத்தில் புதிய மாவட்ட திட்ட அலுவலகம் 46.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தோற்றுவிக்கப்படும்.**

**14. சென்னை மாவட்ட திட்ட அலுவல கம், வட சென்னை, தென் சென்னை என இரண்டு மாவட்ட திட்ட அலுவ லகங்களாக 59 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பிரிக்கப்படும்.**

**15. ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற் றும் கல்வி** (ECCE), **வளர்ச்சி குறை பாடுகள், ஊட்டச்சத்து குறைபாடு கள் அதனை கண்காணிக்கும் முறை கள் உள்ளிட்ட அனைத்து பயிற்சிக ளும் துறையின் அனைத்து களப் பணியாளர்களுக்கும் 2.02 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

**16. குழந்தைகளுக்கெதிரான பாலியல் குற்ற வழக்குகளில் ஏற்படும் இடர்பா டுகளை களையவும், நிறுவனப் பரா மரிப்பில் உள்ள மற்றும் நிறுவனப் பராமரிப்பில் இருந்து வீடேகும் குழந் தைகளைக் கண்காணிக்கவும் ஒரு மேலாண்மை அலகு 150.00 இலட் சம் ரூபாய் செலவினத்தில் உருவாக் கப்படும்**

**17. பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து, பள்ளி மாணவர்களி டையே நேர்மறையான சூழலை உரு வாக்கவும், இளம்பருவத்தினரிடம் உள்ள போதை பழக்கத்தில் இருந்து அவர்களை மீண்டு வரச் செய்யவும், சென்னையில் பள்ளிக் கல்வித் துறை வளாகத்தில் 'உரிமை முற்றம்' செயல் படுத்தப்படும்**

**18. குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையில் குழந்தைகளின் நலனைப் பேணிக்காக்க திறம்பட செயல்பட்ட நிறுவனங்களுக்கு 'முன்மாதிரியான சேவை விருதுகள்' 4.00 இலட்சம் ரூபாய் செலவினத் தில் வழங்கப்படும்**

**19. சென்னை, காஞ்சிபுரம், தருமபுரி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் இயங்கும் சிறப்பு நீதிமன்றங்களில் குழந்தை நேய சூழல், 50.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்**

**20. புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 6 மாவட்டங்களில் நன்னடத்தை அலு வலர் பணியிடங்கள் 42.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தோற்றுவிக் கப்படும்**

**21. அரசு கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல் லங்கள் ஆகியவற்றில் உள்ள குழந் தைகளின் உளவியல் ரீதியான பிரச் சினைகளை கையாளுவதற்கு தொகுப்பூதியத்தில் சமூகப் பணியா ளர் உடன் இணைந்த ஆற்றுப்படுத் துநர் பணியாளர்கள் 10 பேர் ஆண் டுக்கு 24.00 இலட்சம் ரூபாய் செலவினத்தில் ஈடுபடுத்தப்படுவர்**

**22. திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கடலூர், சேலம் மற்றும் கோயம்புத்தூரில் செயல்படும் அரசு கூர்நோக்கு இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு அடிப்படைப் பயிற்சி** (Basic Training Module) **162.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட் டில் வழங்கப்படும்**

இதன் தொடர்ச்சியாக திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கடலூர், சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 5 மாவட்டங் களில் உள்ள அரசு கூர்நோக்கு இல்லங்க ளில் தங்க வைக்கப்படும் குழந்தைகளின் எதிர்மறை எண்ணங்களை மாற்றி, மீண் டும் குற்றச் செயல்களில் ஈடுபடாத வகையில் நல்வழிப்படுத்த 162.00 இலட்சம் ரூபாய் மதிப்பில் அடிப்படைப் பயிற்சி (Basic Training Module) வழங்கப்படும்.

## மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கி வந்த அத்துணை உதவித் தொகைகளும் உயர்வு!

## பெண்கள் - குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க 20 கருத்தரங்குகள்!

### மாற்றுத் திறனாளிகள் நலத்துறை

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கை. முதலமைச்சர் அவர் களின் சார்பாக இந்தப் பதிலுரையைப் பேர வையில் பதிவு செய்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

முதலமைச்சர் தளபதியார் அவர்கள் பொறுப்பேற்ற உடன் துறையினை தன்வ சமே வைத்து, இத்துறைக்கு 2021-2022ல் 813 கோடியே 62 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து, ஆண்டுக் காண்டு அதிகரித்து தற்போது 2025-2026 ஆம் நிதியாண்டில் 1,432.77 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் முதலமைச்சர் தளபதியார் அவர்கள் செயல்படுத்திய புதிய திட்டங்களில் சில திட்டங்களை மட்டும் இங்கு குறிப்பிட்டு கூற விரும்புகிறேன்.

மாற்றுத் திறனாளிகள், அவரவர் தேவைக்கேற்ப, வசதிக்கேற்ப, உபகரணங் களை தெரிவு செய்யும் முறையை (Choice based Appliances) 20212022 ஆம் ஆண்டு முதல் இவ்வரசு அறிமுகம் செய்து செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம் உபக ரண மாதிரிகளை மாற்றுத் திறனாளிகள் தாங்களே தேர்வு செய்துகொள்ளலாம். மாற் றுத் திறனாளிகளுக்கு அவரவர்களின் உடல் நிலைக்கு ஏற்றவாறு பிரத்யேகமாக வடிவ மைக்கப்பட்ட பலதரப்பட்ட வசதிகளுடன் கூடிய மாதிரி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தையும் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, மாற்றுத் திறனாளிகளு டைய பாராட்டை பெற்ற திட்டமாக இது திகழ் கிறது. இரு கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப் பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், 2023-2024 ஆம் ஆண்டிலிருந்து ஒரு கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு விரிவுபடுத்த ப் பட்டு, இந்த ஆண்டில் 9,203 மாற்றுத் திற னாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அனைத்துச் சேவைகளையும் ஓரிடத்தி லேயே பெற்றிடும் வகையில் புறஉலகச் சிந் தனையற்ற, மதிஇறுக்கம் உடையோருக் கான 'ஒப்புயர்வு மையம்'25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் அமைக்கப்பட்டு, இத்திட்டம் கடந்த டிசம்பர்5 முதல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக் கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. 2024-2025 ஆம் ஆண்டு சென்னை மாவட் டத்தை இரண்டாக பிரித்து, வடசென்னைக்கு புதிதாக ஒரு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாற் றுத் திறனாளிகளுக்கு திருக்கோயில்களில் இலவச திருமண உதவித் திட்டம் நடைமு றைப்படுத்தப்பட்டுள்ளது. திருமண உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவி, தேசிய சேமிப்பு பத்திரமாக வழங்கப்பட்டு வந்ததை, மாற்றுத் திறனாளிகளின் கோரிக் கையினை ஏற்று, அவர்களுக்கு ரொக்கமாக வழங்கப்படுகிறது.

அதேபோன்று, மோட்டார் பொருத்தப் பட்ட இலவச தையல் இயந்திரம் வழங்கப்ப டுகிறது. அதற்கான வயது உச்சவரம்பு 45 லிருந்து 60ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அறிவுசார் மாற்றுத் திறனாளிகளின் பெற் றோர்களுக்கும் இந்த இலவச தையல் இயந் திரம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு முழுவ தும் வீடற்ற மாற்றுத் திறனாளிகளுக்கும், அறிவுசார் மாற்றுத் திறனாளிகளின் பெற் றோர்களுக்கும் குடியிருப்பு பட்டா வழங்கிட முதலமைச்சர் தளபதியார் அவர்கள் உத்தர விட்டுள்ளார்கள். அதன்படி இதுவரை 5,961 மாற்றுத் திறனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளன. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமூலம் மாற்றுத் திற னாளிகளுக்கு இதுவரை 1,299 வீடுகள் கட் டிக் கொடுக்கப்பட்டுள்ளன. நகர்ப்புர வாழ் விட மேம்பாட்டு வாரியம்மூலம் 2,496 வீடுகள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப் பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு, மாற்றுத் திறனாளிகளு க்கான உள்ளடக்கம், அணுகல் மற்றும் அவர்களுக்கான வாய்ப்புகளை மேம்படுத் துவதற்காக RIGHTS PROJECT, உரிமைகள் திட்டத்தைப் பொறுத்தவரையில், 70 சதவிகி தம் உலக வங்கி நிதி மற்றும் 30 சதவிகிதம் தமிழ்நாடு அரசின் நிதி பங்களிப்போடு 6 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்பட்டு வருகி றது. இதன்மூலம் மாவட்ட, உட்கோட்ட மற் றும் வட்டார அலுவலகங்களில் எல்லாம் தொடங்கப்பட்டுள்ளது. அதிலே கிட்டத்தட்ட 660 எண்ணிக்கையிலான மறுவாழ்வு களப் பணியாளர்களையும், 264 எண்ணிக் கையிலான மறுவாழ்வு சிகிச்சை தொழில் நுட்ப வல்லுநர்களையும் பணியமர்த்தியுள் ளோம். அதிலும் மாற்றுத் திறனாளி பணியா ளர்களும் அடங்குவர் என்பதைக் குறிப்பிட்டு க் கூற விரும்புகிறேன். 12 வாகனங்கள், விழுதுகள் என்ற வாகனங்கள் நடமாட முடி யாமல் இருக்கின்ற மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக 5 மாவட்டங்களில் ஏற்படுத்தப் பட்டு, அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று 'உரிமைகள் திட் டம்' மற்றும் 'திறன் மேம்பாட்டுக் கழகம்'மூ லம் 251 நபர்களுக்கு பயிற்சி அளித்து வேலைவாய்ப்பும் பெற்றுத்தரப்பட்டுள்ளது. அறிவுசார் குறைபாடுடையோர், மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான 8 புதிய இல்லங் கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. அறிவு சார் குறைபாடு மற்றும் மூளை முடக்குவாத த்தால் பாதிக்கப்பட்ட 1,000 மாற்றுத் திற னாளி குழந்தைகளுக்கு நவீன இயன் முறை உபகரணம், Standing Frameமூலம் அந்த மாற்றுத் திறனாளிகள் எழும்பி நிற்கக் கூடிய ஒரு வசதியுடைய புதிய திட்டம் 2-0 9-2024 அன்று நம்முடைய முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, 217 பேர் இதுவரைக்கும் பயனடைந்துள்ளனர்.

மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்புகளில் 4 சதவிகித இட ஒதுக்கீட் டினை உறுதி செய்திட உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர் களால் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் வாயிலாக வழங்கிவந்த அத் துணை சமூக நலத் திட்டங்களின் உதவித் தொகைகள் அனைத்தும் இருமடங்காக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது. மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்திற்கு கடந்த ஆண்டு மட்டும் 5 கோடியே 29 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்